18.07.2025

அ.வ.எண். 820/2017

வா.சா.1 - துரைராஜ், த/பெ. கே.எஸ்.கந்தசாமி

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 18.07.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் 2001 பாகசாசன ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன். 2001 பாகசாசனம் என் அப்பா, 2 சித்தப்பா, என் தாத்தாவுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1ம் வாதியான என் தகப்பனாருக்கு பி-அட்டவணை சொத்தாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். டி-அட்டவணை சொத்து மற்றொரு சித்தப்பா கே.எஸ் பழனிச்சாமி அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஏ 1-அட்டவணை சொத்து என் தாத்தா சென்னிமலை கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சி-அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. நான் 1ம் அயிட்ட சொத்து பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன். ஏ 1-அட்டவணை சொத்தானது எனது தாத்தா கே.எஸ் சென்னிமலை கவுண்டருக்கு முழு உரிமையுடன் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினையின் படி அவரவர்கள் சொத்தை ஆண்டு அனுபவம் செய்து வந்தார்கள் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏ 1-அயிட்ட சொத்து பொறுத்து , 1ம் பிரதிவாதியான கே.எஸ். சுப்பிரமணி, 1ம் வாதியான என் தகப்பனார் கே.எஸ் கந்தசாமிக்கும், அவரது சகோதரருமான கே.எஸ் பழனிச்சாமிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர் என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.6 ஆவணம், வழக்கு எண்.771/2017 வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தாவிடம் இருந்து என் சித்தப்பா கே.எஸ்.சுப்பிரமணி (1ம் பிரதிவாதி) தானமாக எழுதி வாங்கியிருந்தார் அது

சம்மந்தமாக வழக்கு, என் தாத்தா செட்டில்மெண்ட் எழுதி வைத்த எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை ஏற்பட்டது என்றால் 2001 பாகப்பிரிவினை(வா.சா.ஆ.1) ஆவணத்தின் படி எழுதி வைத்தார். சென்னிமலை கவுண்டர் உயிருடன் இருந்தபோது, எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் 1ம் வாதியான என் தகப்பனாரும், என் தகப்பனாரின் சகோதருமான கே.எஸ்.பழனிச்சாமியும் எதிர் வழக்குரையும் தாக்கல் செய்தனர் என்றால் சரிதான், எதிர் வழக்குரை வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்ய முழு உரிமை வா.சாஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலமாக ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு 1ம் அயிட்ட சொத்தில் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, அவர் தாக்கல் செய்த வழக்கை நிரூபணம் செய்ய வேண்டி ஒரு நில அளவையர் உடன் வழக்கறிஞர் ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டு நிலத்தை அளந்தனர் என்றும், அவ்வாறு நிலத்தை அளவீடு செய்யும்போது நானும், என் தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும், என் மற்றொரு சித்தப்பாவான கே.எஸ் பழனிச்சாமியும் உடன் இருந்தோம் என்றால் சரிதான்.

5. அவ்வாறு நிலத்தை அளவீடு செய்து நான்கு புற எல்லைகளை குறித்து கல் நட்டு, அவர்கள் எல்லைகள் அறுதி செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் ஆட்சேபணை செய்தோம். மேற்படி வழக்கில் என் தகப்பனார், 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் எதிர் வழக்குரையில் சொன்னவாறு என் தாத்தாவான சென்னிமலை கவுண்டரும், இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியான கே.எஸ் சுப்பிரமணியும் மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கிவிட்டனர் என்று வா.சா.ஆ.8 எதிர் வழக்குரை பத்தி 3 ல் சொல்லியுள்ளேன் என்றால் தவறாக எழுதி உள்ளனர் என்று தாத்தா சொன்னதை சொல்லியுள்ளோம்.

6. நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தை எனக்காகவும், என் தகப்பனாருக்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 எதிர் வழக்குரையில் என் தாத்தா சொல்லியதன் பேரில் நான் அவ்வாறு எதிர் வழக்குரையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையில் பத்தி 7 ல், சுப்பிரமணி அ.வ.எண்.771/2017(பழைய வழக்கு எண்.107/2014) வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியவந்தது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur